06 மார்கழிக் குளிரில் (வாழ்த்துப் பாடல்)
பாடல்: மைக்கிள் ராஜ்
இசை மற்றும் பாடியவர்: மார்ட்டின் பிராண்சிஸ்
இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

பல்லவி

மார்கழிக் குளிரில் மாடடைக் குடிலில்
ஊர் உறங்கும் வேளையில்
விண்ணவர் கீதம் மண்ணிலே கேட்குது
விண்ணுக்கும் மண்ணுக்கும் உறவு மலருது
வேந்தன் பிறந்தாரே மண்ணில் மலர்ந்தாரே
Happy Happy Happy Christmas
Merry Merry Merry Christtmas

சரணம்

1. எத்தனைக் காலம் காத்திருந்தோம் - உந்தன்
வரவை எண்ணிப் பார்த்திருந்தோம்
கண்கள் பூத்துப் போனதே - எங்கள்
உள்ளம் வாடிப் போனதே
பெத்தலை ஊரிலே பூபாளம் கேட்குதே
புத்தொளி வீசிட பூலோகம் மலருதே
தோத்தரிக்க நேரம் கூடி வந்ததே
காத்திருந்த காலம் பாடலானதே

2. விண்ணக வாசல் திறக்கின்றது - நம்
உறவை எண்ணி மகிழ்கின்றது
பாவம் தீர்ந்து போனதே - நம்
பாதை செம்மை ஆனதே
பொன்னான நாளிதே விண் தேவன் பாரிலே
நிம்மதி வாழ்வினில் ஆனந்தம் காணுதே
வானம் விட்டு மண்ணில் வந்த செல்வமே
வாழும் நெறி சொல்ல வந்த தெய்வமே

This song is prepared for **Iniya Ithayangal Whatsapp group** and linked in www.manavai.com **(2019)**